**கவனிக்க.-** *2008.05.16 ஆந் திகதிய பகுதி II வர்த்தமானியின் பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1551 - 2008 මැයි 23 වැනි සිකුරාදා - 2008.05.23

*1551 ஆம் இலக்கம் - 2008 ஆம் ஆண்டு மே மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

***(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)***


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 526 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 531 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 526 | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** (i) தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (சிறப்பேற்பாடுகள்) சட்டமூலம் 2008, மாச்சு 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) ஸ்ரீ பாத கல்பவரூக்ஷ சங்வர்தன பதனம (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2008, மாச்சு 07 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, மே 30 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, மே 16 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆயவிற்பனையும் குத்தகையும்

## கல்பிட்டி பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2008/2009

*(2008 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2009 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)*

*2008 ஆம் வருடம் ஆடி மாதம் 1 ஆம் திகதி முதல் 2009 ஆம் வருடம் ஆனி மாதம் 30 ஆம் திகதி வரையுள்ள 12 மாத காலத்திற்கு இத்துடன் இணைக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளில் சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் வருடம் ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத் தவறணை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக ஏற்றுக் கொள்ளப்படும்.*

*2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக் கூடிய உரிமைப் படிவங்களில் கேள்வியை சமர்ப்பிப்பதுடன் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கமைய வைப்புப் பணமாக கல்பிட்டி பிரதேச செயலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச் சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.*

*3. கேள்விப்பத்திரங்கள் முறையாகப் பொறியிடப்பட்ட உறையில் இட்டு இடது பக்க மேல் மூலையில் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-*
*"........................................ஆம் இலக்க..................................கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"*
*எனக்குறிப்பிடப்பட வேண்டும். 2008.05.22 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு கல்பிட்டி பிரதேச செயலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற் குறிப்பிட்ட நேரம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும்.*

*4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஆம் வருடம் ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க இலங்கை குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கமைவாக இடுதல் வேண்டும்.*

*5. 2008.05.30 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளுதல் முடிவடைந்த உடனே எல்லா கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும் அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கைக்காரர்கள் இச் செயலகத்திற்குச் சமுகமளித்திருத்தல் வேண்டும். குறிப்பிட்ட தினத்தில் விற்பனை செய்யப்படாத கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை மீண்டும் 2008.06.10 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இடம் பெறும்.*

*6. இது தொடர்பான மேலதிக விபரங்கள் கல்பிட்டி பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.*

எம். எச். எம். நியாழ்தீன்
பிரதேச செயலாளர்,
கல்பிட்டி.

பிரதேச செயலகம்,
கல்பிட்டி,
2008.04.26

**அட்டவணை**

| தொடர் இல. | பிரிவு | கிராமம் | தவறணை | கேள்விப்பத்திர முடிவுத் திகதி யும் நேரமும் | கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|---|---|
| 01 | கல்பிட்டி | தளுவை | கள்ளு | 2008.05.30, மு.ப. 10.00 மணி | ரூபா 1,000 |
| 02 | கல்பிட்டி | ஏத்தாளை | கள்ளு | 2008.05.30, மு.ப. 10.00 மணி | ரூபா 1,000 |

5-336

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**பொது அறிவித்தல்**

பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி ஒன்றின் கூட்டிணைப்பு

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

*கம்பனியின் பெயர்* : ரிவி கிரண சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*பதிவு இலக்கம்* : பீவீ 63947

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : யக்கபிட்டிய, தம்புள்ள வீதி, குருநாகல்.

5-368

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் தனியார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டதாக அறிவிக்கப் படுகிறது :-*

*கம்பனியின் பெயர்* : சிலுனி இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 63999
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 05.05.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 2/66, ஜே. ஸ்டேஷன் றோட், கொடகம, ஹோமாகம.

செல்வி கொடிதுவக்கு ஆராச்சிகே மனோஜினி ஹேமமாலி
கொடிதுவக்கு (சட்டத்தரணி),
கம்பனிச் செயலாளர்.

5-395

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

*கம்பனியின் பெயர்* : இன்டோ சியாம் இன்டஸ்றீஸ் (பிறைவேற்) லிமிட்டெட்.
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 63579
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 26.03.2008
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 34, பீஓஜ கைத்தொழில் வலயம், பள்ளேகலே, கண்டி.

*கம்பனிச் செயலாளர்* :
கோப்பரேட் மனேஜ்மன்ட் கன்சல்ரன் அன்ட் சேர்விசஸ் (பீவீரீ) லிமிட்டெட்.

5-397

---

## கம்பனிகள் பதிவு பற்றிய அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் நிமித்தம் கீழ்வரும் கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட விபரம் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

*கம்பனியின் பெயர்* : டீ. எஸ். ஆப்டீன் ப்ரதர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பி வி 63181
*கம்பனி பதிவு செய்யப்பட்ட திகதி* : 27.02.2008
*பதிவு செய்யப்பட்ட விலாசம்* : 14-16, பிரதான வீதி, புத்தளம்.

*கம்பனியின் பெயர்* : ஸ்ட்றத்வீல்ட் சென்டர் ஒவ் லர்னிங் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பி வி 63598
*கம்பனி பதிவு செய்யப்பட்ட திகதி* : 27.03.2008
*பதிவு செய்யப்பட்ட விலாசம்* : 638/பி, காலி வீதி, நல்லூருவ, பாணந்துறை.

ஸீ. ஏ. எஸ். கோப்பரேட் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

5-403

---

## நிறுவனத்தின் பெயர் மாற்றம்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

சீ. ஐ. சீ. பேர்டிலைசர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டின் பெயர் 2008 ஏப்பிறல் 22 ஆந் திகதி முதல் சீ. ஐ. சீ. அக்ரி பிஸ்னசஸ் (பிரைவேட்) லிமிட்டெட் என மாற்றப்பட்டதென இத்தால் நாம் அறிவித்தல் கொடுக்கின்றோம். விபரம் வருமாறு:-

*முன்னைய பெயர்* : சீ. ஐ. சீ. பேர்டிலைசர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 2264
*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 205/1/1, டீ. ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு - 10.
*புதிய பெயர்* : சீ. ஐ. சீ. அக்ரி பிஸ்னசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.

பி. எஸ். சீ. பெர்னாண்டோ,
பணிப்பாளர்/செயலாளர்.
சீ. ஐ. சீ. அக்ரி பிஸ்னசஸ் (பிரைவேட்) லிமிட்டெட்.

5-411

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம்*

*கம்பனியின் பெயர்* : வரையறுக்கப்பட்ட தாய் ஷைன் கன்ஷ்டிரக்ஷன் (தனியார்) நிறுவனம்

*கம்பனியின் இலக்கம்* : பீவீ 63569

*பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி* : இல. 212, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10.

மேற்கூறப்பட்ட கம்பனிகள் சார்பாக வரையறுக்கப்பட்ட
மெனேஜர்ஸ் அன்டு செக்ரடரிஸ் (தனியார்) நிறுவனம்
மேற்கூறப்பட்ட கம்பனிகளின் செயலாளர்கள்.

இல. 212, டீ சேரம் பிளேஸ்,
கொழும்பு 10.

5-415/2

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் பிரிவு 9 (1) இன் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டதை இத்தால் அறிவித்துக் கொள்கின்றோம் :-

கம்பனியின் பெயர் : வரையறுக்கப்பட்ட ஒகாயா லங்கா (தனியார்) நிறுவனம்
கம்பனியின் இலக்கம் : பீவீ 63656
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 212, டீ சேரம் பிளேஸ், கொழும்பு 10.

5-415/1

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் கீழ்குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007, சித்திரை மாதம் 24 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்.

கம்பனியின் பெயர் : ரபீனா புட் எக்ஸ்போட்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்.
கம்பனியின் இலக்கம் : பீவீ 63909
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 90, ரெத்மிலேசன் வீதி, கொழும்பு 11.

மனேஜ் மென்ற் அன்ட் பிஸ்னஸ் அட்வைசறி
சேவிஸ்சஸ் பிறைவேட் லிமிட்டெட். ஈ ஓ. 259.
கம்பனி செயலாளர்கள்.

5-416

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (1) ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2007 மே 08 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம்

கம்பனியின் பெயர் : கிளோபல் பாட்னர் கோர்ப்பரேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 64029
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 97, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10.

மனேஜ்மென்ற் அன்ட் பிஸ்னஸ் அட்வைசறி
சேவிஸ்சஸ் பிறைவேட் லிமிட்டெட். ஈ ஓ. 259.
கம்பனி செயலாளர்கள்.

5-417

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

கம்பனியின் முன்னைய பெயர் : கிரீட் எடியுகேஷன்ஸ் ரிரெய்னிங் அன்ட் எம்பிலோய்மென்ட் சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் புதிய பெயர் : கிரியேட் எடியுகேஷன்ஸ் ரிரெய்னிங் அன்ட் எம்பிலோய்மென்ட் சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : என் (பீவீஎஸ்) 47442
பதிவு செய்யப்பட்டுள்ள முகவரி : இல. 4 ஆம் மாடி, இல. 353, பிரதான வீதி, பண்டாரவளை.

மனேஜ் மென்ற் அன்ட் பிஸ்னஸ் அட்வைசறி
சேவிஸ்சஸ் பிறைவேட் லிமிட்டெட். ஈ ஓ. 259.
கம்பனி செயலாளர்கள்.

5-418

---

## அட்டர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்ட காக்கா பள்ளி மரதன் குளத்தைச் சேர்ந்த கபிரியல் பெர்னான்டோ சங்க லக்மால் பெர்னான்டோ ஆகிய நான் இதே முகவரியை சார்ந்த கபிரியல் பெர்னான்டோகே துஷான் கபில பெர்னாண்டோ (தே. அ. அ. இல. 772480407V) என்பவருக்கு சிலாபம் பிரசித்த நொத்தாரிசு ஏ. ஸி. சுவினி பெரேராவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 5091 ஆம் இலக்கமும் 2006.01.12 ஆந் திகதியும் கொண்ட அட்டர்னி பத்திரத்தின் மூலம் வழங்கிய சகல தத்துவங்களையும் 2008.04.08 ஆந் திகதி முதல் உடனடியாக இரத்துச் செய்து விட்டேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்துக்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

இத்தத்துவப் பத்திரத்தின் மூலம் மேற்குறிப்பிட்ட கபிரியல் பெர்னாண்டோகே துஷான் கபில பெர்னாண்டோ இனிமேல் மேற்கொள்ளும் எவ்வித நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்பல்ல அவை எவையும் என்னை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்பதை மேலும் அறிவித்துக் கொள்கிறேன்.

கபிரியல் பெர்னான்டோ சங்க
லக்மால் பெர்னான்டோ.

2008.04.08.

5-429

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவுக்கமைவான கூட்டிணைப்பு அறிவித்தல்

கம்பனிப் பெயர் : அமா கொன்ஸ்ரக்ஷன் (பிறைவேற்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பிவி 63841

*பதிவு செய்த அலுவலகம் : 24/08,* கொஸ்பிலன்வத்தை, சுவரபொல, பிலியந்தலை.

எச்ரிபி பிஸ்னஸ் சேர்விசஸ் (பிறை) லிமிட்டெட்,
*கம்பனிச் செயலாளர்.*

5-432

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பழைய பெயர் :* கொமர்ஷல் எயார் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் : என் (பிவிஎஸ்) 39999*
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* சூட் 3ஏ, நிவ் போர்பஸ் அன்ட் வோக்கர் பில்டிங், 46/42, நவம் மாவத்தை, கொழும்பு 2
*கம்பனியின் புதிய பெயர் :* மெக் எயார் எக்ஸ்பிரஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிறை) லிமிட்டெட்,
*கம்பனி செயலாளர்கள்.*

5-458

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பழைய பெயர் :* சிஎஃப் டி மெல் சன்ஸ் (பிரைவேற்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63855
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 161, சிறீ சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2008,* ஏப்பிறல் 17

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிறை) லிமிட்டெட்,
*கம்பனி செயலாளர்கள்.*

5-459

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*கம்பனியின் பழைய பெயர் :* மிஸன் டு த வேல்ட் (பிரைவேற்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் : என் (ஏ) 1479*
*கம்பனியின் புதிய பெயர் :* மிஸன் டு த வேல்ட் - லங்கா
*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* 47, அலெக்சான்றா பிளேஸ், கொழும்பு 7

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிறை) லிமிட்டெட்,
*கம்பனி செயலாளர்கள்.*

5-460

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது:*

*கம்பனியின் பழைய பெயர் :* எக்சில் சொஃப்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63980
*பதிவு செய்த அலுவலகம்:* த பார்க்வே பில்டிங், 5 ஆவது மாடி, 48, பார்க் வீதி, கொழும்பு 08
*கூட்டிணைப்புத் திகதி :* 2008.05.02

கோர்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிறை) லிமிட்டெட்,
*கம்பனி செயலாளர்கள்.*

5-461

---

பதிவிலக்கம் பிவி 63584 என்பதனைக்கொண்டதும் இல. 475/32, கோட்டை வீதி, ராஜகிரிய என்னும் முகவரியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தையுடையதுமான கம்பனியொன்று கோ ரெஸிடென்ஸீஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என்னும் பெயரில் 2008, பங்குனி 26 ஆந் திகதியன்று 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டது என இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

பணிப்பாளர்.

5-462

---

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் கம்பனி கூட்டிணைத்தல் சம்பந்தமான பொது அறிவித்தல்

மேற்குறிப்பிட்ட கம்பனிச் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ் குறிப்பிட்ட கம்பனியின் பதிவாக்கல் சம்பந்தமான தகவல்கள் பொதுமக்களின் கவனத்திற்காக இத்தால் தெரியப்படுத்தப்படுகிறது.

*கம்பனியின் பெயர் :* டெர்ரா(f) போமா (தனியார்) வரையறுக்கப்பட்டது
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பிவி 63499

*பதிவு செய்த திகதி :* 2008.03.18
*கம்பனியின் விலாசம் :* இல. 69/1, கின்சி ரோட், கொழும்பு 08

கம்பனி பணிப்பாளர்.

5-464

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) விதிகளின் கீழ் கீழ்க்காணும் கம்பனியின் கூட்டிணைப்பு பற்றி இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது:-

*கம்பனியின் பெயர் :* ஸ்டாப்டெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

*கம்பனியின் இலக்கம் :* பிவி 63890

*கூட்டிணைக்கப்பட்ட திகதி :* 2008 ஏப்பிறல் 23

*பதிவு செய்யப்பட்ட அலுவலகம் :* இல. 17ஏ, றொஸ்மீட் பிளேஸ், கொழும்பு 07

5-465

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் விதிகளின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* சுனேலா ஜயவர்தன என்வயமன்ட் டிசைன் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* "ஹைபரி", 218, புல்லர்ஸ் வீதி, கொழும்பு 07
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63128
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, பெப்புருவரி 21

*கம்பனியின் பெயர் :* கல்கெரி டிவலபர்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 535/5, நாவல வீதி, நாவல, ராஜகிரிய
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63380
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, மாச்சு 08

*கம்பனியின் பெயர் :* எலிகன்ட் டிரவல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 717சி, 3 ஆவது மாடி, தலவது கொடை வீதி, பத்தரமுல்லை
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63504
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, மாச்சு 18

*கம்பனியின் பெயர் :* இலக்ட்ரோ மொபைல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 7ஏ, இஸ்தர் இடம், பார்க் வீதி, கொழும்பு 05
*கம்பனியின் இலக்கம் :* பிவி 63566
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, மாச்சு 25.

புரோபஷனல் எசைன்ட்மன்ட் அன்ட்
செக்ரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்

2008, மாச்சு 31.

5-467/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9 இன் விதிகளின் கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர் :* அஷான் காமன்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* வல்கம வீதி, கம்மன் பில, பண்டாரகம.
*கம்பனியின் இலக்கம் :* பிவி 62332
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, திசெம்பர் 10

*கம்பனியின் பெயர் :* எஸ். ஜீ. சீ. டிவலப்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 184, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 08
*கம்பனியின் இலக்கம் :* பிவி 62805
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2008, சனவரி 24

*கம்பனியின் பெயர் :* யீல்ட் சேர்விசஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு செய்யப்பட்ட முகவரி :* 157ஏ/1, கின்ஸி வீதி, கொழும்பு 08
*கம்பனியின் இலக்கம் :* பிவி 62851
*கூட்டிணக்கப்பட்ட திகதி :* 2007, சனவரி 29

புரோபஷனல் எசைன்ட்மன்ட் அன்ட்
செக்ரட்டேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
செயலாளர்கள்

2008, மாச்சு 31.

5-467/ 2

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நிட்டம்புவ, நீர்கொழும்பு வீதி, பஹல வத்தை. இல. 175 ஐச் சேர்ந்த ராஜபக்ஷ விதானகே சுமதிபால ஆகிய நான், பலவித நல் நோக்கங்களுக்காகவும் கருத்துக்களுக்காகவும், சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான என். டபிள்யூ. பீ. ஹேமந்த அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2008.03.19 ஆந் திகதியிடப்பட்ட இல. 139 இன் கீழ், நிட்டம்புவ, நீர்கொழும்பு வீதி, பஹல வத்தை, இல. 176/3 ஐச் சேர்ந்த ராஜபக்ச விதானகே சுராஜ் பிரியந்தவின் சார்பில் எனக்காக நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவத்தில் அடங்கியுள்ள தத்துவங்கள் மற்றும் அதிகாரங்கள் அனைத்தையும் இல்லாது ஒழித்து இரத்துச் செய்கிறேன் என அனைவருக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

ராஜபக்ஷ வித்தானகே சுமதிபால.

5-428

# ஏல விற்பனைகள்

## இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி PLC

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியால் வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏலவிற்பனை*

**சகல வசதிகளையும் கொண்ட வீட்டுக் கட்டிடம் ஏலவிற்பனை**

**கிழக்கு மஹாவாதுவையில் அமைந்தள்ள கிரிபெல்ல கஹவத்த கட்டிய எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எல். டபிள்யூ. எல். சில்வா என்பவரினால் 28.08.1973 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 650 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் லொட் A. என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அத்துடன் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள் மற்றும் சகலதுமாகும்.. இதன் பரப்பளவு 18.5 பேர்ச்சஸ் ஆகும்.**

*(இவ்வாதனம் வத்தளையில் வசிக்கும் மொறட்டுவகே சாந்தனி பர்னாந்து மற்றும் கபு சிப்புகே சாந்த பர்னாந்து என்பவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி PLC யினால் பெறப்பட்ட ஆதனம்)*

இவ்வாதனம் 2008.06.06 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.04.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2008.04.04 ஆந் திகதிய ''ஐலன்ட்'', ''திவயின'', ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கொழும்பிலிருந்து காலி பாதையில் பிரயாணத்தை தொடங்கி வாதுவ நகருக்கு சுமார் 1/2 கிலோமீற்றர் முன்னதாக இடது பக்கத்தில் அமைந்துள்ள வேறகம பாதைக்கு திரும்பவும். இப்பாதையில் சுமார் 75 மீற்றர் தூரம் முன்னேறி சென்றால் வலது பக்கமாக சந்திக்கும் மணற் பாதையில் சுமார் 50 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்தப்படல் வேண்டும் :-

> கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏல விற்பனையாளர் கட்டணம் 2.5%, நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தேசிய அபிவிருத்தி வங்கி PLC யில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்து ஆதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''பிரதான முகாமையாளர் (சட்டம்), தேசிய அபிவிருத்தி வங்கி PLC , இல. 40, நவம் முாவத்தை, கொழும்பு 2'' தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. : 011-2437701-10.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ வீதி,
வட்டபுலுவ,
கண்டி,
தொலைபேசி இல. 081-2211025, 071-4755974,
பெக்ஸ் இல. 081-2211025.

5-409/1

## இலங்கை தேசிய அபிவிருத்தி வங்கி PLC

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியால் வழங்கப்பட்ட கடன்களை மீளப்பெறுதல் (விசேட ஏற்பாடுகள்) 4 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏலவிற்பனை*

**வசிப்பிடத்திற்கு மிகப் பொருத்தமான பெறுமதிமிக்க சொத்து ஏலவிற்பனை**

**ஜாஎல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உதம்விட்ட கிராமத்தில் லாஹுவெல மற்றும் கடுவவத்தை எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் கே. டீ. எஸ் ரத்னாயக்க என்பவரினால் 28.04.2003 ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 4678 ஆம் இலக்க வரைபடத்தின் பிரகாரம் ரஜவத்த டெரஸ் ரஜ மாவத்தை கொட்டுகொட - வரிப்பண இலக்கம் 100 H எனும் காணியும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சகலதுமாகும். இதன் பரப்பளவு 5 பேர்ச்சஸ் ஆகும்.**

*(இவ்வாதனம் ஜாஎலயில் வசிக்கும் ஜீவராஜா ஓல்டிரின் பிரபாகரன் மற்றும் சுந்தரம் க்ஜலா குமாரி என்பவர்களுக்கு வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக தேசிய அபிவிருத்தி வங்கி PLC யினால் பெறப்பட்ட ஆதனம்)*

இவ்வாதனம் 2008.06.06 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2008.04.18 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2008.04.04 ஆந் திகதிய ''திவயின'', ''த ஐலன்ட்', ''தினகரன்'' பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செய்யப்படல் வேண்டும் :

> கொள்முதல் விலையில் 10%, உள்நாட்டு வரி 1%, ஏல விற்பனையாளர் கட்டணம் 2.5%, நொத்தாரிசு கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500, சகல பகிரங்கப்படுத்தல் செலவு, கொள்முதலில் மிகுதி 90%, விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் தேசிய அபிவிருத்தி வங்கி PLC யில் செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்து ஆதனம் மற்றும் விபரங்களுக்கு.**- ''பிரதான முகாமையாளர் (சட்டம்), தேசிய அபிவிருத்தி வங்கி PLC , இல. 40, நவம் மாவத்தை, கொழும்பு 2'' தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல.: 011-2437701-10.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்பெற்ற
ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி,
தொலைபேசி இல. 081-2211025, 071-4755974,
பெக்ஸ் இல. 081-2211025.

5-409/2

## ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் - பொரளை கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 4 இன் கீழான ஏல விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்தின் ஏல விற்பனை**

***உத்தரவு பெற்ற நில அளவையாளர் டீ. ரீ. ஏ. திசாநாயக்க அவர்களால் 2003, யூன் மாதம் 18 ஆந் திகதியிடப்பட்டுத் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1660 இல் துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணியிலிருந்து வெளியிலிருந்தும் 'கொடபொர கஹவத்த' என அழைக்கப்படும் பிரிக்கப்பட்ட, நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டானது அதிலுள்ள அனைத்துமுடன் மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவாகம் கோரளை பள்ளேபற்றுவில் கடுவெல பிரதேச சபை எல்லைக்குள் கடுவெல பிரிவில் தலஹேனவில் அமைந்துள்ளது. 2006, ஓகத்து 28 ஆந்திகதியிடப்பட்ட முறி இல. 2757 இல் இரண்டாவது அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட பாதை உரிமையும் கொண்டது.***

***(காணியின் விஸ்தீரணம் : 7 பேர்ச்)***

*(கடமைப்பட்டவர்களும், சொத்தை ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைத்தவர்களுமான தெபுவனகே நிஹால் ஃபெனாண்டோ மற்றும் அஜந்தா பிரபாந்தி குணதிலக்க ஆகியோர் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சீ. ஜயவர்த்தன அவர்களால் 2006, ஒகத்து 28 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட முறி இல. 2757 இல் கொடுப்பனவில் தவறியுள்ளார்கள்.)*

*ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட்டால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ், மேலே விபரிக்கப்பட்ட சொத்தை அதே இடத்தில் 2008, யூன் 12 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு நான் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வேன்.*

***தீர்மான அறிவித்தலுக்கு*** *.- 2007, யூன் 29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007, ஓகத்து 14 ஆந் திகதிய 'ஐலண்ட்', 'திவயின' மற்றும் 'தினகரன்' பத்திரிகைகளையும் தயவுசெய்து பார்க்கவும்.*

***கொடுப்பனவு செய்யும் முறை*** *.- சித்திகரமான கொள்வனவாளர் ஏலத்தின் இறுதியில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-*

*(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து வீதம்) ;*
*(2) உள்ளூராட்சிகளுக்கு ஒரு வீதம் 1% ;*
*(3) ஏலதாரர் தரகுப் பணமாக, கொள்வனவு விலையின் இரண்டரை வீதம் 2 1/2% ;*
*(4) விற்பனை நிபந்தனைகளை அத்தாட்சிப்படுத்தலுக்கான நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;*
*(5) எழுதுவினைஞர் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;*
*(6) மொத்த விளம்பர செலவு.*

*விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையின் எஞ்சிய 90% ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட்டில் வைப்பிலிடப்படல் வேண்டும்.*

*மேலதிக விபரங்கள், காணி உறுதி, ஏனைய தொடர்புடைய ஆவணங்களை 'ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்டெட் தலைமை அலுவலக கடன் மேற்பார்வை மற்றும் மீளப்பெறுகைத் திணைக்களம், பிரதம முகாமையாளர்' இடம் பரீட்சிக்கலாம். தொலைபேசி இல.: 2661815, 2661816, 2661808.*

*ரஞ்சித்த எஸ். மஹநாம,*
*சமாதான நீதவான் (அகில இலங்கை),*
*நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர், ஏலதாரர்.*

*மஹநாம ட்ரைவ்.*
*இல. 474, பிட்டகோட்டே,*
*கோட்டே.*
*தொலைபேசி : 2863121*

*5-435*

---

## இலங்கை வங்கி

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை அறிவித்தல்*

**சொத்து, நிலமனை ஏலவிற்பனை**

*கடன் தொடர்பு இல. 417/04*

*இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2008.03.14 ஆந்திகதி இல. 1541 வர்த்தமானியிலும் 2008.03.05 மற்றும் 2008.03.06 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 56, பன்னல ரோட், குளியாபிட்டிய என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திரு. ஜே. அல்பியஸ் பெரேரா 2008.07.10 ஆந் திகதிய மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

***அட்டவணை***

*வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், கட்டுகம்பொல ஹத்பத்து கட்டுகம்பொல கோரளை தெற்கில் குளியாபிட்டிய பட்டினசபை எல்லைகளுள் கனதுல்லயில் அமைந்த ஹிரிலியத்த ஹேனயும் ஹிரிலியத்த வத்தயும் என யாவரும் அறிந்ததும் அழைக்கப்படுவதுமான காணி உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பீ. நவரத்ன தயாரித்த 2004.02.02 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 4761 இல் விபரித்த துண்டு 1 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 4761 இன்படி வடக்கில் : துண்டு 4 உம் ; கிழக்கில் : முன்னர் நாகநாதனாலும் தற்சமயம் குரேயும் உரிமை கோரும் காணியும மற்றும் முன்னர் நாகநாதனும் தற்சமயம் நிமல் பியசிறியும் உரிமை கோரும் காணியும் ; தெற்கில் : மாதம்பேயிலிருந்து குளியாபிட்டிய வரை பெருந்தெருவும் ; மேற்கில் : துண்டு 2 உம்*

எல்லைகளாகக் கொண்டு பதினான்கு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 14பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். வரிமதிப்பிலக்கம் 656/ஏ ஐக் கொண்ட ஆதனம் குளியாபிட்டிய மாவட்ட காணிப் பதிவகத்தில் கே 193/76 இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

டபிள்யூ. ஏ. உபாலி,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாபிட்டிய கிளை.

5-439

---

## செலான் வங்கி பி எல் சி - ஹோமாகம கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட சரத்துக்கள்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### காணி ஏலவிற்பனை

**மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள ஹேவாகம் கோரளையில் பல்லேபத்துவிலுள்ள ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பிட்டிப்பன தெற்கில் அமைந்துள்ள கட்டடம், மரங்கள், பெருந்தோட்டம் மற்றும் அங்கு காணப்படுகின்ற அனைத்துடனும் மகாகெலேமுகலானவத்த (பகுதி) என்றழைக் கப்படுகின்ற காணியின் அனுமதிபெற்ற நிலஅளவையாளர் பி. எச். எம். எல். பிரேமசந்திர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1997.05.10 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைப்பட இல. 651 இல் துண்டு 2 பி எனக் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் பிரிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு அத்துடன் முப்பத்தியொன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 39.25பே.) விஸ்தீரணம் கொண்டுள்ளதுடன் ஹோமாகம காணிப் பதிவகத்தில் தலைப்பு G1505/162 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.**

(''கடன்பட்டோர்'' என்ற வகையில் ஹோமாகமவைச் சேர்ந்த குருப்பு ஆச்சி மானதுங்ககே டோனா சிரோமி சிரத்தமானதுங்கவுக்கு வழங்கப்பட்ட வசதிகளுக்காக செலான் வங்கி PLC க்கு ஈடுவைக்கப்பட்ட காணி.)

மேலே விபரிக்கப்பட்டுள்ள காணியை அதே இடத்தில் 2008, யூன் 17 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு பகிரங்க ஏலத்தின் மூலம் நான் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**-ஹோமாகம நகர நிலையத்திலிருந்து ஹைலெவல் வீதி ஊடாக பிட்டிப்பன சந்திவரை சுமார் 1.6 கி. மீ. சென்று வலது புறமாகத் திரும்பி மொரகஹஹேன வீதி ஊடாக சுமார் ஐந்து கி. மீ. சென்றதும் குறிப்பிடப்பட்ட காணியைச் சென்றடையலாம்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 28.12.2007 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி 2007.12.18 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''லங்கா தீப'' பத்திரிகைகளையும் 12.01.2008 ஆந் திகதிய ''வீரகேசரி'' ஆகிய பத்திரிகையையும் பார்க்கவும்.

கட்டணம் செலுத்தும் முறை.- வெற்றிகரமான கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்காணும் தொகைகளைச் செலுத்த வேண்டியுள்ளனர்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%), (2) விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு ஒரு வீதம் (1%), (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2.5%), (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் ரூபா 2000, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் ரூபா 500, (6) விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி PLC இல் வைப்புச் செய்தல் வேண்டும்.

காணி ஒப்பினை மற்றும் சம்பந்தப்பட்ட ஆவணங்களை ''சிரேஷ்ட பொது முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி PLC, 'சிலிங்கோ செலான் கோபுரம்', இல. 90, காலி வீதி, கொழும்பு 3''. தொ. பே. 2456285, 2456263, 2456284.

துசித கருணாரத்ன,
அனுமதிபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளரும்.

ரி. அன்ட் எச். ஒக்சன்,
இல. 50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. : 2696155, 2572940.

5-448

---

## இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவின் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

*(இலக்கம் 901, மாத்தளை றோட், அளவத்துகொட என்னுமிடத்தில் அமைந்துள்ள அவு (ƒ)ப் என்ரர்பிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட் இன் பணிப்பாளராகிய திரு. மொஹமட் அவு(ƒ)ப் அப்துல் கரீம் என்பவரினால் ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம்)*

பிணைப்பத்திர தொடர்பிலக்கம் - 58/03

இலங்கை வங்கிக் கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2005.04.01 ஆந் திகதிய இலக்கம் 1387 கொண்ட வர்த்தமானியிலும் 2005.03.28 ஆந் திகதிய ''தினமின'', ''தினகரன்'' மற்றும் '' டெய்லி நியூஸ்'' ஆகிய புதினப் பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் அறவிடக்கூடிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இலக்கம் 24, ரொறிங்ரன் ரோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் சமரவிக்ரம அவர்களால் 2008.06.19 ஆந் திகதி முற்பகல் 11.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து, உடகம்பஹா அளவத்துகொடவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். பான (B) பொக்க அவர்களால் தயாரிக்கப்பட்ட 454 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டுகள் 1, 2 எனக் காட்டப்பட்டுள்ள "அம்பலன்பிற்றியே வத்தவின் பாகமொன்று" என்றழைக்கப்படும் காணியின் துண்டுகளாகிய, வடகிழக்கில் : துண்டு 1இன் ஒரு பகுதியும்; தென்கிழக்கில்: 5 ஆந் துண்டும் மாத்தளை றோட்டும் ; தென்மேற்கில்: துண்டுகள் 3 உம், 4 உம் ; வடமேற்கில் : பி. டபிள்யூ. டீ. றோட்டையும் எல்லைகளாகக் கொண்ட பத்து தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10.75பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் எச் 351/298 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறிய ஹாரிஸ்பத்து, உடகம்பஹா, அளவத்துகொடவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. ஏ. பியதாச அவர்களால் தயாரிக்கப்பட்ட 1999.04.21 ஆந் திகதிய 113/3/99 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள "அம்பலன்பிற்றியே வவத்தவின் பாகமொன்று" என்றழைக்கப்படும் காணியின் துண்டுகளாகிய, வடகிழக்கில் : 454 ஆம் இலக்க வரைபடத்தில் 1 ஆந் துண்டும் ; கிழக்கில்: மாத்தளைக்குச் செல்லும் றோட்டும் ; தென்கிழக்கில் : 454 ஆம் இலக்க வரைபடத்தின் 5 ஆந் துண்டும்; தென் மேற்கில் : 454 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 உம் ; வடமேற்கில் : அங்கும்புரவிலிருந்து மாத்தளைக்குச் செல்லும் றோட்டும் எல்லைகளாகக் கொண்ட ஒன்பது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.25பே.) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணி முழுவதும் அதற்குள் அமைந்துள்ள கட்டடமும் மற்றும் அனைத்துமாகும். இது கண்டி காணிப் பதிவகத்தில் எச் 395/200 ஆம் பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஈ. எம். உபதிஸ்ஸ (B) பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

5-441

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.